திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அவர்களுக்காக ஒதுக்கப் பட்ட பணத்தில் பெரும்பகுதி செலவிடப்படவில்லை என்று அரசாங்கத்திற்கு அக்கவுண்டண்ட் ஜெனரலிடமிருந்து குறிப்பு கள் வந்திருக்கின்றனவா ? அப்படிக் குறிப்புகள் வந்திருந்தால் அதன்மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கேள்வி மாவட்ட வாரியாக பர்மா அகதிகளின் வாழ்க்கைக்காக கூட்டுறவு உற்பத்திச் சங்கங்களைத் தொடங்குவது பற்றியது. ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்பட்டதா, வேறு இடத்தில் இருந்து குறிப்புகள் வந்தனவா என்ற விவரங்கள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதற்கான விளக்கத்தைத் தரமுடியும்.

MR. SPEAKER : Question No. 31.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Mr. Speaker, Sir, I have been raising my hand and trying to catch the eye of the Chair but I have not been given an opportunity to put a supplementary question. If no supplementary question is allowed on such an important question, how can we elicit any information from the Government? We are really sorry for not giving us a chance to put supplementary questions.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது சரியானதல்ல. அவர்களுக்கு இன்றைக்கு அதிகமாக துணைக் கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் குறுக்கே, குறுக்கே பேசிக்கொண்டிருக்கக் கூடாது. மிக அதிகமான துணைக் கேள்விகள் கேட்க அவர்களுக்கு வாய்ப் பளிக்கப்பட்டிருக்கிறது. வினா நேரம் முடிய இன்னும் பத்து நிமிடங்கள்தான் இருக்கிறது. நான்கு கேள்விகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எத்தனைத் துணைக் கேள்வி கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவர்கள் பார்க்க வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒவ்வொருவருக்கும் துணைக் கேள்விகள் கேட்க வாய்ப்புக் கொடுப்பது என்றால் நான்கு மணி நேரம் இருந்தால்தான் முடியும். ஆகவே அவர்கள் அப்படிக் கேட்பது சரியானதல்ல என்பதை மட்டும் தெரிவித்துக்கொள் கிறேன்.

நீராற்றின் குறுக்கே அணைக்கட்டு

*31 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் கீழ் "நீராறு ஆற்றில்" அணை கட்டும் வேலைகளை தமிழ்நாடு அரசு துவக்கியுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம். குறுக்கே அணைகட்டும் வேலை நடந்து வருகிறது. கேரள அரசின் இசைவுக்குப்பின் நீராற்றின் கீழ் பகுதியில் நீர்த்தேக்கம் கட்டும் வேலை மேற்கொள்ளப்படும்.

1971 ஜூன் 23]

திரு. சு. துரைசாமி : அந்த வேலை எப்போது முடியும்? நீராற்றில் அணை கட்டுவதன் மூலம் எவ்வளவு நீரை தேக்கி வைக்க முடியும், எவ்வளவு ஏக்கர்களுக்குக் கொடுக்க முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 9,000 மில்லியன் கன அடி தேக்க முடியும். வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. விரைவாக நிறைவேற்றி வைக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. மு. பழனிசாமி : நீராறு ஆற்றில் அணை கட்டுவது சம்பந்தமாக நமது அரசு பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருப் பதைப் போல் யானைமலை ஆற்றுத் தண்ணீரைப் பெற்றுத் தர தீவிர முயற்சி மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கேரள அரசு இடமலையாற்று நீர்த்தேக்கத்தைக் கட்டிய பிறகு பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் பயன்படுத்துவதற்காக ஆனைமலையாற்றி லிருந்து 2,500 மில்லியன் கன அடி நீரைத் திருப்புவதற்குத் தமிழ் நாட்டுக்கு உரிமை உண்டு.

திரு. அ. ப. சண்முகசுந்தரம் : நீராற்றின் அணைக்கட்டு வேலை முடிந்ததற்குப் பிறகு மேலும் எவ்வளவு ஏக்கர் நிலத்திற்கு அதிகப் படியான பாசன வசதி கிடைக்கும் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய விவரக்குறிப்பு தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : இந்த நீராற்றுப் பிரச்னையோடு பரம்பிக்குளம்—ஆளியாறு பிரச்சினை சம்பந்தமாகவும் கேரள அரசோடு இன்னும் பேசவேண்டியிருக்கிறதா? புதிதாக பாண்டி யாறு, புன்னம்புழா ஆற்றுத் திட்டத்தை அமுலாக்குவது பற்றிக் கேரள அரசோடு நம் அரசு பேசிற்று என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாண்டியாறு—புன்னம்புழா என்பது தனிப்பட்ட பிரச்னை. பரம்பிக்குளம்—ஆளி யாறு திட்டத்திற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. பாண்டியாறு—புன்னம்புழா பற்றி தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் அளிக்கிறேன்.

Linking of Ganges with Cauvery

* 32 Q.—THIRU N. K. PALANISAMY : } Will the Hon
THIRU S. DURAISAMY : }
the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government has requested the Centre to take a survey for linking the Ganges with the Cauvery; and

(*b*) if so, the details of the same?